கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
**முன்னிலை : திரு.S.சாது சிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07ம் நாள், வெள்ளிக்கிழமை
அசல் வழக்கு எண்.294/2022
CNR No.TNMD130003222022
* * * *

கார்த்திக் ... வாதி

/எதிர்/

அமுதா ... பிரதிவாதி

இவ்வழக்கானது 04.08.2026ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.தனபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பாபு ராஜேந்திரன் அவர்கள் ஆஜராகியும் இருந்து வந்த அசல் வழக்கில், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

தாவாச்சொத்தில் உள்ள வாதியின் அமைதியான அனுபவத்தை இந்நிர் பிரதிவாதியோ அவரது வகையாட்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரி வாதியால் அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1) வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையின் சுருக்கம்:–

1.1) தாவா சொத்துக்கள் வீடுகள் மற்றும் அதனுடன் நீட்டிக்கப்பட்ட பகுதிகள் சர்வே எண்.45/1A1ல் கட்டுப்பட்ட 5 ஏக்கர் 69 செண்டில் மேல்புரம் 3 ஏக்கர் 3 சென்டானது ஆதியில் கருப்பாயி அம்மாள் மற்றும் அவரது மகன் ஆறுமுகம் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டதாகும் என்றும், மேற்சொன்ன கருப்பாயி அம்மாளின் வயோதிகம் காரணமாகவும் பராமரிக்க முடியாத நிலையாலும், அவர்களது குடும்பச்சூழல் காரணமாகவும், சர்வே எண்.45/1A–ல் கட்டுப்பட்ட தாவாச்சொத்து உட்பட பிற சொத்துக்களை கருப்பாயி அம்மாளும் அவரது மகன் ஆறுமுகம் ஆகியோர் இருவரும் சேர்ந்து மொக்கமாயன் என்பவரை சர்வே எண்.45/1A1–ல் கட்டுப்பட்ட

சொத்துக்களை பொறுத்து நிர்வகிக்கும் பொருட்டு 19.07.2022ம் தேதியிட்ட ஆவண எண்.217/2022ன்படி தங்களது முகவராக நியமித்த மொக்கமாயன் என்பவர் சர்வே எண்.45/1A1ல் கட்டுப்பட்ட 5 ஏக்கர் 60 சென்டில் மேல்புரம் அமைந்துள்ள 3 ஏக்கர் 3 செண்டு நிலத்தினை பல்வேறு வீட்டடி மனைகளாக அதாவது 1 முதல் 37 வீட்டடி மனைகளாக உருவாக்கியதாகவும், அதில் தாவாச்சொத்தானது 36 மற்றும் 37 பிளாட்டுகளில் கட்டுப்பட்டுவிட்டதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

1.2) இந்நிலையில், மேற்படி பொது அதிகார முகவரான மொக்கமாயன் என்பவர் பிளாட் எண்.36 மற்றும் 37ஐ பொறுத்து சாலைக்குமார் என்பவருக்கு கடந்த 27.06.2003ம் தேதியன்று தகுந்த மறுபயன்களை பெற்றுக்கொண்டு ஆவண எண்கள்.2535 மற்றும் 2536/2003ன்படி கிரையம் செய்துக்கொடுத்து விட்டதாகவும், இந்நிலையில், மேற்படி கிரையத்தேதி முதல் மேற்படி சாலைக்குமார் மேற்படி பிளாட்டுகளான 36 மற்றும் 37ஐ தனது தனித்த சுவாதீனத்தில் வைத்து தனது சொந்த சொத்தாக அனுபவம் செய்து வந்த நிலையில், மேற்படி சாலைக்குமார் அவரது குடும்பசூழல் காரணமாக அவர் கிரையம் பெற்ற சொத்துக்களை 09.01.2008ம் தேதியன்று நிர்மலா

என்பவருக்கு ஆவண எண்.94/2008ன் படி கிரையம் செய்துக் கொடுத்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது.

1.3) இந்நிலையில், மேற்படி நிர்மலா என்பவர் தான் கிரையம் பெற்ற சொத்துக்களை அவரது தனித்த சுவாதீனத்தில் வைத்து அனுபவம் செய்து வந்த சமயத்தில் மேற்படி நிர்மலா என்பவர் திருப்பரங்குன்றம் வட்டாட்சியரிடம் தாவாச்சொத்துக்களை உட்பிரிவு செய்து அவரது பெயருக்கு தனிப்பட்டா வழங்கக்கோரி மனு செய்ததாகவும், மேற்படி மனுவும் பிர்க்கா சர்வேயருக்கு அனுப்பப்பட்டு, அதன் பின்னிட்டு தாவாச்சொத்துக்கள் பார்வையிடப்பட்டு சர்வே எண்.45/59 என உட்பிரிவு செய்யப்பட்டு மேற்படி நிர்மலா பெயரில் பட்டா வழங்கப்பட்டதாகவும், மேற்படி நிர்மலா என்பவர் தாவாச் சொத்துக்களை பராமரிக்க இயலாத நிலையில், பார்த்திபராஜா என்பவரை கடந்த 30.06.2021ம் தேதியன்று தனது பொது அதிகார முகவராக ஆவண எண்.2197/2021ன் படி நியமித்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது.

1.4) இந்நிலையில், மேற்படி பொது அதிகார முகவரான பார்த்திபராஜா தாவாச்சொத்துக்களை கடந்த 12.01.2022ம் தேதியன்று

இந்நிர் வாதிக்கு தகுந்த மறுபயன்களை பெற்றுக்கொண்டு ஆவண எண்.122/2022ன்படி பதிவுக்கிரையப்பத்திரத்தின் மூலம் கிரையம் செய்துக்கொடுத்துவிட்டதாகவும், மேற்படி கிரையம் தேதி முதல் தாவாச்சொத்துக்களை இந்நிர் வாதி தனது சுவாதீனத்தில் வைத்து தனது சொந்த அனுபவத்தில் அனுபவம் செய்து வந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1.5) இந்த சூழ்நிலையில், இந்நிர் பிரதிவாதிக்கு தாவாச் சொத்துக்களுக்கு அருகில் சொத்துக்கள் அமைந்துள்ளது என்றும், இந்நிலையில், வாதியானவர் தாவாச்சொத்தில் வீடு கட்ட முடிவு செய்து 2022ம் வருடம் ஏப்ரல் முதல் வாரத்தில் வீடு கட்ட கட்டுமான வேலைகளை ஆரம்பித்தபோது இந்நிர் பிரதிவாதி தாவாச் சொத்துக்களில் இந்நிர் பிரதிவாதியின் சொத்தும் உள்ளது எனக்கூறி வாதியின் கட்டுமான பணிகளை செயலை தடுத்துநிறுத்திவிட்டதாகவும், மேலும், மத்தியஸ்தர்கள் இந்நிர் வாதி மற்றும் பிரதிவாதியின் சொத்துக்களை தகுந்த சர்வேயரைக்கொண்டு அளந்து பார்க்க வாதி ஒப்புக்கொண்ட நிலையில், இந்நிர் கிரையத்தாரரான நிர்மலா என்பவர் திருப்பரங்குன்றம் வட்டாட்சியரிடம் சர்வே எண்.45/59ல் கட்டுப்பட்ட நிலங்களை அளக்கக்கோரி மனுச்செய்து கடந்த 13.04.2022ம்

தேதியன்று அளக்கப்பட்டது என்றும், சர்வேயர் நிலத்தை அளந்த பின்பு பின்பு பிரதிவாதியின் சொத்தானது வாதியின் சொத்தில் இல்லையென்று குறிப்பிட்டு அத்துமால் சான்று என்ற சான்றிதழை 18.04.2022ம் தேதியன்று வாதிக்கு கொடுத்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது.

1.6) பின்னிட்டு, கடந்த 19.10.2022ம் தேதியன்று தாவாச்சொத்தில் இந்நிர் வாதியின் அமைதியான அனுபவத்தினை இடையூறு செய்ய முயற்சி செய்ததாகவும், அதனை வாதி தடுத்துநிறுத்தியபோது இந்நிர் பிரதிவாதியானவர் தாவா இடத்தினை விட்டுசெல்லும்போது தாவாச்சொத்தில் உள்ள வாதியின் அமைதியான அனுபவத்தினை இடைஞ்சல் செய்தே தீருவேன் என்று வர்மித்த சென்றதால் வாதி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

**2) பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்:-**

2.1) பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையில், தாவாச்சொத்தானது, அரசு பணியாளர்கள் கூட்டுறவு வீட்டமைப்பு சங்கம் A.2767க்கு பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றும், இந்நிலையில், வழக்குச்சொத்து சம்பந்தமாக கடந்த 16.04.2008ம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட பொது

அதிகாரப் பத்திரத்தின் மூலம் உரிய அதிகாரம் வழங்கப்பட்டு, பின்னர் கடந்த 14.07.2011ம் தேதியிட் ஆவண எண்.2737/2011ன் மூலம் வழக்குச்சொத்து பிரதிவாதிக்கு முறையாக கிரையமாக வழங்கப்பட்டது என்றும், இந்நிலையில், பிரதிவாதியானவர், அவர் கிரையம் பெற்ற நாளிலிருந்து வழக்குச்சொத்தை அனுபவித்து வருவதாகவும், அதற்கு முன்னரும் பிரதிவாதியின் முன்னோர்கள் பல ஆண்டுகளாக மேற்படி இடத்தை அனுபவித்து வந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

2.2) மேலும், கடந்த 16.06.2021ம் தேதியன்று தாசில்தார் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் உட்பிரிவு செய்யப்பட்டு R.S.No.45/58 என்ற சர்வே எண்ணில் பட்டா மாற்றம் செய்யப்பட்டு, பிரதிவாதியின் பெயரில் தனிப்பட்டா வழங்கப்பட்டதாகவும், அதற்கான பட்டா மாற்ற உத்தரவு மற்றும் இணையவழி பட்டா நகல்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும், வாதியானவர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள பிளாட் எண்கள் 36 மற்றும் 37 குறித்து ஆவணங்களை தாக்கல் செய்திருந்தாலும், தற்போது பிளாட் எண்.102ல் உரிமை கோருவது தவறானது என்றும், பிளாட் எண்.102 பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றும், வாதிக்கும் பிரதிவாதியின் பிளாட் எண் 102–க்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்றும்,

வாதியானவர் தாவாச்சொத்தினை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், பிரதிவாதியின் உரிமையை மறுக்காத நிலையில் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும், எனவே, இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

**3) எழுவினாக்கள்:-**

இவ்வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை, பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை மற்றும் இவ்வழக்கு சம்மந்தமான அனைத்து ஆவணங்களையும் இந்நீதிமன்றம் கவனமாக நன்கு பரிசீலனை செய்து கீழ்கண்ட எழுவினாக்கள் இந்நீதிமன்றத்தினால் வனையப்பட்டுள்ளன.

1. விளம்புகை பரிகாரம் கோராமல் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கானது பாதிக்கப்பட்டுள்ளதா?
2. தாவாச்சொத்தானது வாதிகளின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் தான் உள்ளதா?
3. வழக்குச்சொத்தினை பொறுத்து வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?
4. தரப்பினர்களுக்கு கிடைக்ககூடிய இதர பரிகாரங்கள் என்ன?

**4) சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: –**

4.1) வாதி தரப்பில், வாதி கார்த்திக் என்பவர் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4.2) பிரதிவாதி தரப்பில், பிரதிவாதி அமுதாவின் கணவரான பழனி என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலமாக பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5) எழுவினாக்களுக்கான தீர்வு : –**
**எழுவினா 1–ற்கான தீர்வு:–**

1. விளம்புகை பரிகாரம் கோராமல் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கானது பாதிக்கப்பட்டுள்ளதா?

5.1) வாதியானவர், தாவாச்சொத்தில் உள்ள அவரது அமைதியான அனுபவத்திற்கும் சுவாதீனத்திற்கும் பிரதிவாதியானவர் இடையூறு ஏற்படுவதாகக் கூறி, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை மட்டும் கோரி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார். இதற்கு மாறாக,

பிரதிவாதி தரப்பில், வழக்குச்சொத்தின் மீது வாதியின் உரிமையானது மறுக்கப்பட்டுள்ள நிலையில், வாதியானவர் அசல் வழக்குச்சொத்தினை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல் வெறும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பதால், இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று வாதிடப்பட்டுள்ளது.

5.2) இந்நிலையில், வா.சா.1ன் குறுக்கு விசாரணையை இந்நீதிமன்றம் ஆராய்ந்தபோது, பிரதிவாதியின் 14.07.2011ம் தேதியிட்ட பதிவுக்கிரையப்பத்திரம் (பி.வா.சா.ஆ.3) மற்றும் அதனைத் தொடர்ந்து வழங்கப்பட்ட பட்டா (பி.வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ.5) ஆகியவற்றின் இருப்பை வாதி ஒப்புக்கொண்டிருப்பதும், பிரதிவாதியின் ஆவணங்களை இரத்து செய்யும் பரிகாரமோ அல்லது தனது உரிமையை விளம்புகை செய்யும் பரிகாரமோ இவ்வழக்கில் கோரவில்லை என்பதையும் வெளிப்படையாக ஒப்புக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

5.3) மேலும், "பிரதிவாதியின் ஆவணத்தை ரத்து செய்யக் கோரவில்லை", "விளம்புகை பரிகாரம் கோரவில்லை",

"வழக்குச்சொத்தை அடையாளம் காண்பதிலும் பிரச்சினை உள்ளது" என்று வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் அளித்த ஒப்புதல் வாக்குமூலங்கள், வழக்கின் தன்மையை தீர்மானிப்பதில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதேநேரத்தில், வாதி தனது உரிமைத் தொடர் ஆவணங்களாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஆராய்ந்தபோது, கருப்பாயி அம்மாள் மற்றும் ஆறுமுகம் ஆகியோரிடமிருந்து தொடங்கி, மொக்கமாயன், சாலைக்குமார், நிர்மலா வழியாக இறுதியில் வாதி வரை தொடர்ச்சியான உரிமைச் சங்கிலி (Chain of Title) காணப்படுகின்றது. மேலும், வா.சா.ஆ.5 ஆன பட்டாவின் மூலம் சர்வே எண்.45/59 என தனி உட்பிரிவு செய்யப்பட்டிருப்பதும் பதிவாகியுள்ளது.

5.4) மறுபுறம், பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.4 பட்டா மாறுதல் உத்தரவை ஆராய்ந்தபோது, அதில் Government Servants Colony President என்ற பெயருடன், கருப்பாயி அம்மாள் மற்றும் ஆறுமுகம் ஆகியோரின் பெயர்களும் கூட்டுப்பட்டாவில் இடம் பெற்றிருப்பது புலனாகிறது. இதன்மூலம், வாதி தரப்பின் மூல உரிமையாளர்களின் பெயர்கள் அரசுப் பதிவுகளிலும் இடம்பெற்றிருப்பது மறுக்க முடியாத உண்மையாகிறது. அதேபோல்,

பி.வா.சா.ஆ.5 ஆன பட்டாவில் பிரதிவாதியின் பெயரில் சர்வே எண்.45/58 என தனிப்பட்டா வழங்கப்பட்டிருப்பதும், வாதியானவர் உரிமை கோரும் சொத்து சர்வே எண்.45/59 என வேறு உட்பிரிவில் அமைந்துள்ளது என்பதும் ஆவணங்களிலிருந்து இந்நீதிமன்றத்திற்கு தெளிவாகிறது. எனவே, இருதரப்பினரும் உரிமை கோரும் சொத்துக்கள் வேறுபட்ட உட்பிரிவு எண்களில் அமைந்துள்ளன என்ற வாதத்திற்கு ஆரம்பகட்ட ஆதாரம் இருப்பது இந்நீதிமன்றம் கருதுகிறது.

5.5) மேலும், பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணையில், வாதி தனது வழக்குரையில் குறிப்பிடும் மொக்கமாயன், சாலைக்குமார், நிர்மலா ஆகியோரின் ஆவணங்கள் குறித்து பிரதிவாதிக்கு எவ்வித அறிவும் இல்லை என்றும், 1964ம் ஆண்டு நடைபெற்ற முந்தைய வழக்கைப் பற்றியும் தெரியாது என்றும் பல இடங்களில் சாட்சியம் அளித்துள்ளார். இத்தகைய அறியாமை பதில்கள், பிரதிவாதி தனது உரிமையின் மூலத்தை முழுமையாக விளக்க இயலாத நிலையையும் வெளிப்படுத்துகின்றன. எனவே, இவ்வழக்கில் இருதரப்பினரும் தனித்தனியான உரிமை ஆவணங்களையும், தனித்தனி பட்டாக்களையும் முன்வைத்து உரிமை கோருகின்றனர். இருப்பினும், வாதி கோரும் சொத்து சர்வே எண்.45/59 என்றும், பிரதிவாதி உரிமை

கோரும் சொத்து சர்வே எண்.45/58 என்றும் ஆவணங்கள் காட்டுகின்றன. இந்நிலையில், பிரதிவாதி உரிமை கோரும் சொத்தும் மற்றும் வாதி உரிமை கோரும் சொத்தும் ஒன்றே என்று சட்டப்படியாக நிரூபிக்கப்படாத நிலையில், வாதியின் அமைதியான அனுபவத்தில் இடையூறு ஏற்பட்டதாகக் கூறப்படும் காரணத்திற்காக நிரந்தர உறுத்துக்கட்டளை வழக்கு தாக்கல் செய்திருப்பதை, விளம்புகை பரிகாரம் கோராத காரணத்தால் மட்டுமே ஆரம்பத்திலேயே சட்டப்படி பாதிக்கப்பட்ட வழக்காகக் கருத இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அதன்படி, எழுவினா 1 ஆனது வாதிகளுக்கு ஆதரவாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கப்படுகிறது.

**<u>6) எழுவினா 2–ற்கான தீர்வு:–</u>**

2. தாவாச்சொத்தானது வாதியின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் தான் உள்ளதா?

6.1) தாவாச்சொத்தானது தனது சட்டப்படியான சுவாதீனத்திலும் அமைதியான அனுபவத்திலும் இருந்து வருவதாக வாதி தரப்பில் வாதிடப்பட்டது. அதற்கு மாறாக, பிரதிவாதி தரப்பில், வழக்குச்சொத்து பிரதிவாதிக்கே சொந்தமானது என்றும், பிரதிவாதியின் அனுபவத்திலும்

சுவாதீனத்திலும் உள்ளது என்றும், வாதியானவர், வழக்குச்சொத்தில் உள்ள அவரது அனுபவத்தை எவ்விதமான சட்டப்படியான ஆவணங்கள் மூலம் நிரூபிக்கவில்லை என்றும் வாதிடப்பட்டுள்ளது.

6.2) வாதியானவர், தனது உரிமை மற்றும் அனுபவத்தை நிரூபிப்பதற்காக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். அதன்பொருட்டு, மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்தபோது, வா.சா.ஆ.1 ஆன 19.07.2002ம் தேதியிட்ட பொது அதிகார ஆவணம், வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆன 27.06.2003ம் தேதியிட்ட இரு கிரையப்பத்திரங்கள், வா.சா.ஆ.4 ஆன 09.01.2008ம் தேதியிட்ட கிரையப்பத்திரம், வா.சா.ஆ.5 ஆன 09.07.2021ம் தேதியிட்ட பட்டா, வா.சா.ஆ.6 ஆன 30.06.2021ம் தேதியிட்ட பொது அதிகார ஆவணம் மற்றும் வா.சா.ஆ.7 ஆன 12.01.2022ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் ஆகிய ஆவணங்கள் மூலம், வாதி தாவாச்சொத்தில் உள்ள சொத்து உரிமை தொடர்ச்சியை நிரூபணம் செய்ய முயற்சி செய்துள்ளது இந்நீதிமன்றத்திற்கு புலனாகிறது.

6.3) குறிப்பாக, வா.சா.ஆ.5 பட்டாவில் வழக்குச்சொத்தின் சர்வே

எண்.45/59 என தனி உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டிருப்பது பதிவாகியுள்ளது. இந்நிலையில், மேற்படி வா.சா.ஆ.5 ஆன பட்டா என்பது வாதி குறிப்பிடும் சொத்து தனித்த உட்பிரிவில் அரசுப் பதிவுகளில் இடம்பெற்றிருப்பதைக் காட்டுகிறது.

6.4) எனினும், வா.சா.1 குறுக்கு விசாரணையில், வாதி தான் தாவாச்சொத்தினை கிரையம் வாங்குவதற்கு முன் வில்லங்கச் சான்றிதழ் பார்த்ததாகவும், மேற்படி வில்லங்க சான்றிதழ் தன் வசம் இருப்பதாகவும், நிர்மலா அவர்கள் வட்டாட்சியரிடம் மனு செய்ததன் அடிப்படையில் நில அளவீடு நடத்தப்பட்டதாகவும், அதன் பின்னரே தாவாச்சொத்தானது சர்வே எண்.45/59 என உட்பிரிவு செய்யப்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், கடந்த 18.04.2022ம் தேதியன்று சர்வேயரால் வழங்கப்பட்ட சான்றின் அடிப்படையில் பிரதிவாதியின் சொத்தானது, வாதியின் நிலத்தில் இல்லை என தெரிவிக்கப்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படியான சாட்சியங்களானது முழுமையாக ஆவணப்படுத்தப்பட வில்லை என்றாலும், வாதியின் வழக்குரைக்கு ஓரளவு ஆதரவாக அமைகின்றன.

6.5) மறுபுறம், குறுக்கு விசாரணையில் வா.சா.1 சில முக்கியமான சங்கதிகளையும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். கருப்பாயி அம்மாளின் உரிமை எவ்வாறு தோன்றியது என்பது தனக்குத் தெரியாது என்றும், மொக்கமாயன் 37 மனைகளாகப் பிரித்ததை நிரூபிக்கும் அசல் மனைப்பிரிவு வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்குச்சொத்தை அடையாளம் காண்பதிலும் சிக்கல் இருப்பதாகவும், பிரதிவாதியின் ஆவணங்களை ரத்து செய்யும் பரிகாரம் கோரவில்லை என்றும் ஒப்புக்கொண்டுள்ளார். மேற்படியான சாட்சியமானது வாதியின் வழக்கில் சில குறைபாடுகளை வெளிப்படுத்துகின்றன.

6.6) இந்நிலையில், பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.5 வரையான ஆவணங்களை ஆய்வு செய்தபோது, 1963ம் ஆண்டிலிருந்து தொடங்கும் ஆவணங்கள், 2011ம் ஆண்டு கிரையப்பத்திரம் மற்றும் 16.06.2021ம் ஆண்டு பட்டா மாறுதல் உத்தரவு ஆகியவற்றின் அடிப்படையில் சர்வே எண்.45/58 என்ற உட்பிரிவில் பிரதிவாதியின் பெயரில் பட்டா வழங்கப்பட்டிருப்பதும் தெரிய வருகிறது. மேலும், பி.வா.சா.4 ஆன பட்டா மாறுதல் உத்தரவில்

Government Servants Colony President என்ற பெயருடன் கருப்பாயி அம்மாள் மற்றும் ஆறுமுகம் ஆகியோரின் பெயர்களும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இதன்மூலம், இரு தரப்பினரும் தங்களது சொத்து உரிமையின் தொடர்ச்சியை ஒரே மூலப்பகுதியிலிருந்து உருவாக்கியிருப்பதாகத் தோன்றினாலும், பின்னர் ஏற்பட்ட உட்பிரிவுகள் வேறுபட்டிருப்பது ஆவணங்களில் வெளிப்படுகிறது.

6.7) மேலும், பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், 1964ம் ஆண்டு நடைபெற்ற வழக்கு, கோடாங்கி கருப்பண்ணன் குடும்பத்தின் உரிமை, மொக்கமாயன், சாலைக்குமார், நிர்மலா ஆகியோரின் ஆவணங்கள், சர்வே எண்.45/59 உட்பிரிவு ஆகியவற்றைப் பற்றித் பிரதிவாதிக்கு தெரியாது என்று பலமுறை சாட்சியமளித்துள்ளார். இத்தகைய சாட்சியம், பிரதிவாதி தரப்பு வாதி ஆவணங்களை முழுமையாக மறுக்கக்கூடிய வலுவான ஆதாரங்களை முன்வைக்கவில்லை என்பதையும் காட்டுகின்றன. மேலும், பி.வா.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவானது, திருமங்கலம் வட்டாட்சியரிடம் உரிய பரிகாரம் கோருமாறு வழங்கப்பட்ட வழிகாட்டுதலாக மட்டுமே உள்ளது

என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மேற்படி உத்தரவானது பிரதிவாதியின் உரிமையை இறுதியாக உறுதி செய்யும் தீர்ப்பாக கருத இயலாது. அதேபோன்று, பி.வா.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள காவல் நிலைய மனு ரசீதும், வழக்குச்சொத்தின் உரிமை அல்லது சுவாதீனத்தை நிரூபிப்பதற்கு எந்தவிதமான சான்று மதிப்பும் உடையதாக இல்லை.

6.8) மேலும், இருதரப்பிலும் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஒருசேர பரிசீலனை செய்தபோது, வாதி உரிமை கோரும் சொத்தின் சர்வே எண்.45/59 என்றும், பிரதிவாதி உரிமை கோரும் சொத்தின் சர்வே எண்.45/58 என்று தனித்தனி உட்பிரிவுகளில் அமைந்துள்ளன என்பது மேற்படி ஆவணங்களிலிருந்து இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. பிரதிவாதி, வாதியின் சர்வே எண்.45/59 உட்பிரிவிலுள்ள சொத்தைத் தாம் அனுபவித்து வருவதாக உறுதியான ஆவணச் சான்றுகளை தாக்கல் செய்யவில்லை. அதேபோல், வாதி தரப்பின் உரிமைத் தொடரும் பட்டாவும் முற்றிலும் பொய்யானவை என நிரூபிக்கவும் இயலவில்லை. எனவே, வழக்கில் கிடைத்துள்ள சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் ஒட்டுமொத்த மதிப்பீட்டின் அடிப்படையில், வாதி தனது வழக்குச்சொத்தான சர்வே எண்.45/59ஐ

சட்டப்படியான ஆவணங்களின் அடிப்படையில் அனுபவித்து வருவதை மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் கருதுகிறது. அதன்படி, எழுவினா 2க்கு வாதிக்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது.

**7) எழுவினா 3–ற்கான தீர்வு:–**

3. வழக்குச்சொத்தினை பொறுத்து வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?

7.1) வாதியானவர், தாவாச்சொத்தானது தனது சட்டப்படியான அனுபவம், சுவாதீனம் மற்றும் வாதியின் அமைதியான அனுபவத்தில் இருந்து வருவதாகவும், அதில் பிரதிவாதியானவர் சட்டவிரோதமாக இடைஞ்சல் செய்ததன் காரணமாகவே நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும் வழக்குரையிலும், வா.சா.1ன் சாட்சியத்திலும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார்

7.2) மேலும், பிரதிவாதி தரப்பில், வாதிக்கு வழக்குச்சொத்தின் மீது உரிமையோ, சுவாதீனமோ இல்லை என்றும், பிரதிவாதியின் உரிமை மறுக்கப்பட்டுள்ள நிலையில் விளம்புகை பரிகாரம் கோராமல் வெறும்

நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியிருப்பது சட்டப்படி ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் வாதிடப்பட்டுள்ளது.

7.3) இந்நிலையில், எழுவினா 1 மற்றும் எழுவினா 2ல் தீர்மானிக்கப்பட்டுள்ளபடி, வாதி தனது தாவாச்சொத்தில் உள்ள அனுபவம் மற்றும் சுவாதீனத்தை நிரூபிப்பதற்காக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையான ஆவணங்களையும், சர்வே எண்.45/59ல் வழங்கப்பட்ட பட்டாவையும் தாக்கல் செய்துள்ளார். அவ்வாவணங்கள் ஒன்றுக்கொன்று முரண்படாமல், உரிமைத்தொடரை நிறுவும் வகையில் அமைந்துள்ளன. மேலும், வா.சா.1 குறுக்கு விசாரணையிலும், வாதி கிரையம் வாங்குவதற்கு முன் வில்லங்கச் சான்றிதழ் பார்த்ததாகவும், நிர்மலா அவர்கள் அளவீடு செய்யக்கோரி மனு செய்த பின்னரே உட்பிரிவு செய்து பட்டா வழங்கப்பட்டதாகவும், பின்னர் பிரதிவாதி இடைஞ்சல் செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், குறுக்கு விசாரணையில் ஒப்புதல்கள் இருந்தபோதிலும், வாதியின் சுவாதீனம் முற்றிலும் இல்லையென்று கூறும் வகையில் எந்த உறுதியான சாட்சியும் வெளிவரவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

7.4) அதேபோன்று, பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.7 வரையுள்ள ஆவணங்களை ஆய்வு செய்தபோது, அவை சர்வே எண்.45/58ஐ சார்ந்தவை என்பதும், வாதி உரிமை கோரும் சர்வே எண்.45/59ஐ உள்ளடக்கியவை அல்ல என்பதும் ஆவணங்களிலிருந்து இந்நீதிமன்றத்திற்கு புலனாகிறது. பிரதிவாதி தாவாச்சொத்தில் உள்ள தனது உரிமையை நிரூபிக்கும் ஆவணங்களை தாக்கல் செய்திருந்தாலும், அவை வாதியானவர், வழக்குச்சொத்தை ஆக்கிரமித்திருப்பதை நிரூபிக்கும் வகையில் அமையவில்லையென்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

7.5) மேலும், பி.வா.சா.1 குறுக்கு விசாரணையில், வாதி தரப்பின் மூல ஆவணங்கள், மொக்கமாயன், சாலைக்குமார், நிர்மலா ஆகியோரின் உரிமைச் சங்கிலி, சர்வே எண்.45/59 உட்பிரிவு ஆகியவற்றைப் பற்றி தனக்கு தெரியாது என்று பலமுறை சாட்சியம் அளித்துள்ளார். இதனால், வாதி தரப்பின் ஆவணங்களை உறுதியான முறையில் மறுக்கும் சாட்சியத்தை பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்பது தெளிவாகிறது.

7.6) மேலும், அசல் வழக்கில் வாதி குறிப்பிட்டுள்ள

இடைஞ்சலானது கடந்த 19.10.2022ம் தேதியன்று நடைப்பெற்றதாக வழக்குரையிலும், சாட்சியத்திலும் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில், மேற்படி இடைஞ்சலானது குறித்த வாதியின் சங்கதிகயை மறுக்கும் வகையில் மேற்படி சம்பவம் நடைபெறவில்லை என்றோ அல்லது தாவாச்சொத்தானது வாதியின் சுவாதீனத்தில் இல்லை என்பதை நிரூபிக்கும் வாய்மொழியான சாட்சியங்களோ அல்லது ஆவணங்களோபிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

நிலையான சட்டக்கோட்பாட்டின்படி, சொத்து அமைதியான மற்றும் சட்டப்பூர்வமான சுவாதீனத்தில் உள்ள நபரின் அனுபவத்தில், சட்டத்திற்கு புறம்பாக மற்றொருவர் தலையிடுவதை நீதிமன்றம் தடுக்க அதிகாரம் பெற்றுள்ளது. குறிப்பாக, பிரதிவாதி தனது உரிமையை சட்டப்படி நிலைநிறுத்தாமல், வாதியின் சுவாதீனத்தில் தன்னிச்சையாக குறுக்கிட முடியாது என்பது நிலைப்பெற்ற சட்டமாகும்.

7.7) அசல் வழக்கில், வாதி தாவாச்சொத்தில் உள்ள தனது அனுபவத்தினையும் சுவாதீனத்தையும் ஆவணங்கள் மற்றும் வாய்மொழிச் சாட்சிகள் மூலம் நிகழ்தகவின் மிகுதி அடிப்படையில் நிரூபித்துள்ளார். மறுபுறம், பிரதிவாதியானவர், தாவாச்சொத்தில் உள்ள

வாதியின் சுவாதீனத்தை மறுக்கும் வலுவான சாட்சி, சான்றாவணங்களை முன்னிலைப்படுத்த தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, வாதியின் அமைதியான அனுபவத்தில் பிரதிவாதி இடைஞ்சல் செய்வதை தடுக்கும்பொருட்டு, வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தினை வாதிக்கு வழங்குவது நியாயமானதாகவும், சட்டப்படியானதாகவும் இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

7.8) எனவே, இவ்வழக்கின் உண்மை நிலைகள், இருதரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள், இருதரப்பினரின் வாய்மொழிச் சாட்சிகள் மற்றும் அவற்றின் ஒட்டுமொத்த மதிப்பீட்டின் அடிப்படையில், வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமான வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றும், பிரதிவாதியோ, அவரது வகையாட்களோ வழக்குச்சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்திற்கும் சுவாதீனத்திற்கும் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. அதன்படி, எழுவினா 3க்கு வாதிக்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

**8) எழுவினா 3க்கான தீர்வு:-**

4. தரப்பினர்களுக்கு கிடைக்ககூடிய இதர பரிகாரங்கள் என்ன?

தரப்பினருக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் குறித்து பார்க்கையில், இவ்வழக்கின் தன்மை, இருதரப்பினரும் தாக்கல் செய்துள்ள வழக்குரை, எதிர்வழக்குரை, வாய்மொழியான சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை இந்நீதிமன்றம் முழுமையாக பரிசீலனை செய்துள்ளது.

8.1) வாதியானவர், இவ்வழக்கில் தனது அமைதியான அனுபவம் மற்றும் சுவாதீனத்தைப் பாதுகாக்கும் நோக்கில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். மறுபுறம், பிரதிவாதியானவர், வழக்குச்சொத்து தமக்கே சொந்தமானது என்றும், வாதியின் உரிமையை மறுத்து எதிர்வாதம் முன்வைத்துள்ளார். இருப்பினும், பிரதிவாதி தனக்குரிய உரிமையை உறுதி செய்யவோ அல்லது வாதியின் ஆவணங்களை செல்லாது என அறிவிக்கவோ எந்தவித எதிர்வழக்கோ (Counter Claim) அல்லது தனி வழக்கோ தாக்கல் செய்திருப்பதாக எவ்வித ஆதாரமும் பிரதிவாதி தரப்பில் இந்நீதிமன்றத்தின் முன்வைக்கவில்லை.

8.2) அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை ஆய்வு செய்தபோது, வாதி சர்வே எண்.45/59ல் உரிமை கோருவதும், பிரதிவாதி சர்வே எண்.45/58ல் உரிமை கோருவதும் இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது. இவ்விரு உட்பிரிவு எண்களும் தனித்தனியாக பட்டா வழங்கப்பட்டுள்ளதாலும், இருதரப்பினரும் அவர் அவர்களது தரப்பில் ஆவணங்களின் அடிப்படையில் உரிமை கோரியிருப்பதும் இந்நீதிமன்றத்திற்கு புலனாகிறது. எனவே, எதிர்காலத்தில் எல்லை, அளவு, உரிமை அல்லது ஆவணங்களின் செல்லுபடித்தன்மை தொடர்பாக ஏதேனும் புதிய உரிமைத் தகராறு எழுந்தால், அதற்குரிய உரிய சட்டநடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இருதரப்பினருக்கும் உரிமையுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

8.3) மேலும், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களையோ அல்லது பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கிரையப்பத்திரங்களையோ செல்லாது என்று அறிவிக்க வேண்டும் என்ற பரிகாரம் இவ்வழக்கில் இருதரப்பாலும் கோரப்படவில்லை. அதுபோல, எல்லை நிர்ணயம், ஆவண ரத்து, உரிமை விளம்புகை அல்லது சுவாதீன மீட்பு போன்ற பரிகாரங்களும்

இவ்வழக்கின் அடிப்படையாக இல்லை. எனவே, அவ்வாறான பரிகாரங்கள் குறித்து இந்நீதிமன்றம் இவ்வழக்கில் எந்தவிதமான தீர்ப்பும் வழங்கமுடியாது. இதனிடையே, இவ்வழக்கில் வழங்கப்படும் தீர்ப்பு, வாதியின் வழக்குச்சொத்தின் மீதான அமைதியான அனுபவத்தைப் பாதுகாப்பதற்கான நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்குவது என்ற வரம்பிற்குள் மட்டுமே அமைகிறது. இதனால், எதிர்காலத்தில் உரிமை, எல்லை, உட்பிரிவு அல்லது ஆவணங்களின் செல்லுபடித்தன்மை தொடர்பாக உரிய சிவில் வழக்குகளைத் தாக்கல் செய்து, சட்டப்படி பரிகாரம் கோருவதற்கு இருதரப்பினரின் உரிமையும் பாதிக்கப்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக,** வாதியால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கானது இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு, தாவாச்சொத்தில் வாதியின் அனுபவத்தினை இந்நிர் பிரதிவாதியோ, அவரது வகையாட்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமானது வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக

சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 07.08.2026ம் நாளான்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.08.07 19:17:39 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

<u>இணைப்பு</u>:–

1. <u>வாதி தரப்பு சாட்சிகள்</u>:–

வா.சா.1 – கார்த்திக் (வாதி)

2. <u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>:–

| | |
|---|---|
| வா.சா.ஆ.1. | 19.07.2002ம் தேதியிட்ட பொது அதிகார ஆவணத்தின் – சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2. | 27.06.2003ம் தேதியிட்ட கிரையப்பத்திர ஆவண எண்.2535/2003ன் – சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 27.06.2003ம் தேதியிட்ட கிரையப்பத்திர ஆவண எண்.2536/2003ன் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 09.01.2008ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் – சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.5 | 09.07.2021ம் தேதியிட்ட பட்டா – கணினி பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.6 | 30.06.2021ம் தேதியிட்ட பொது அதிகார ஆவணத்தின் – சான்றிட்ட நகல் |

வா.சா.ஆ.7 12.01.2022ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் – சான்றிட்ட நகல்

3. <u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள்</u>: –

பி.வா.சா.1 – பழனி (பிரதிவாதியின் கணவர்)

4. <u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u>:–

| | |
|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 21.12.1963ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் – அசல் |
| பி.வா.சா.ஆ.2 | 10.10.2008ம் தேதியிட்ட பவர் பத்திரத்தின் – சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.3 | 14.07.2011ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் – அசல் |
| பி.வா.சா.ஆ.4 | 16.06.2021ம் தேதியிட்ட பட்டா மாறுதல் உத்தரவு – கணினி நகல் |
| பி.வா.சா.ஆ.5 | பட்டா எண்.3028க்கான 10(1) சிட்டா – கணினி பதிவிறக்க நகல் |
| பி.வா.சா.ஆ.6 | 19.08.2020ம் தேதியிட்ட W.P.(MD) No.4117/2020ன் உத்தரவு – கணினி நகல் |
| பி.வா.சா.ஆ.7 | 11.03.2022ம் தேதியிட்ட மனு இரசீது – அசல் |

5. <u>நீதிமன்ற சாட்சிகள்:–</u> இல்லை

6. <u>நீதிமன்ற சான்றாவணங்கள்:–இல்லை</u>

**7. <u>சாட்சி தரப்பு சான்றாவணங்கள் :-</u>** இல்லை

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.08.07 19:17:46 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருமங்கலம்.**

அசல் வழக்கு எண்.13/2018
செவ்வை – தீர்ப்புரை
நாள்:07.08.2026